# குதிரைவாலி... குறைந்த மழையிலும் குஷியான வருமானம்



வேலை ஆள் பற்றாக்குறை, குறைவான மகசூல் போன்ற காரணங்களால் அழிவுநிலைக்கு வந்துவிட்ட சிறுதானியங்களில் குதிரை வாலியும் ஒன்று. ஆனால், குறைந்த அளவில் கிடைக்கும் மழையிலேயே மானாவாரி பூமியில் சிறப்பாக வளரக்கூடிய பயர்தான் குதிரைவாலி. இந்த ரகசியம் அறிந்த விவசாயிகள் மட்டும், ஆங்காங்கே விடாமல் குதிரைவாலியைப் பிடித்துக் கொண்டு பயணம் செய்து கொண்டுள்ளனர்.
புதுக்கோட்டை மாவட்டம், வாகையூர் அன்பழகனும் அவர்களில் ஒருவர். ஆனால் சில ஆண்டுகளாக குதிரைவாலியை கைவிட்டிருத்தவர் தற்போது மறுபடியும் கைப்பிடித்திருக்கிறார்... நல்ல விலை கிடைக்கிறது என்கிற உற்சாகத்தோடு!

அவருக்கு சொந்தமாக நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில், இரண்டு ஏக்கர் கிணத்துப் பாசனம். இரண்டு ஏக்கர் மானாவாரி. கிணற்றில் இருக்கும் தண்ணீரை வைத்து நெல், காய்கறி, தென்னை, கடலை, வரகு என்று இயற்கை முறையில் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார். இரசாயன உரத்தைக் கொட்டிக் கொண்டிருந்த அவர் ஐந்து வருடங்களுக்கு முன்னால் ரோஸ் தொண்டு நிறுவனத்தின் மூலமாக மண்புழு உரம், பஞ்சகாவ்யா, மூலிகை பூச்சி விரட்டை தயாரிக்க கற்றுக் கொண்டார். அதில் இருந்தே, இயற்கை விவசாயத்தைக் கடைபிடிக்க ஆரம்பித்தார். அவருடைய செம்மண் பாங்கான நிலத்தில் ஆடிப்பட்டத்தில் தான் குதிரைவாலியை விதைத்துக் கொண்டிருக்கிறார். பல வருடங்களாக மானாவாரியில் இதை சாகுபடி செய்தாலும், இடையில் ஏழு வருடமாக ஆள் பற்றாக்குறை, சரியான விலை இல்லாததினால் விதைக்கவில்லை. இந்த வருடம் சாகுபடி செய்திருக்கிறார். என்ற அன்பழகன், மானாவாரியில் குதிரைவாலி சாகுபடி செய்யும் முறைபற்றி விவரிக்கத் தொடங்கினார்.

குதிரைவாலியின் வயது 90 நாள். பாசன வசதியுள்ளவர்கள் ஆண்டு முழுவதும் விதைக்கலாம். மானாவாரி விவசாயிகள் மழைக் காலங்களில் விதைப்பதுதான் சிறந்தது. சித்திரை, வைகாசி மாதங்களில் பெய்யும் கோடை மழையைப் பயன்படுத்தி நிலத்தை நன்றாக உழவு செய்து வைத்துக் கொண்டு, ஆடி மாதம் விதைக்கலாம். விதைப்புக்கு முன்பாக இரண்டு டன்

தொழுவுரத்தைத் தூவி, உழவு செய்து விதைக்க வேண்டும். இந்த அடிவுரத்தைத் தவிர அறுவடை வரை எந்த உரமும் தேவையில்லை.

அரை ஏக்கருக்கு ஒரு கிலோ விதையை 10 கிலோ மணலுடன் கலந்து தூவி விதைக்க வேண்டும். 10 கிலோ மணலுக்கு பதிலாக 50 கிலோ மண்புழு உரத்தைக் கலந்தும் விதைக்கலாம். (இவர் மண்புழு உரம் கலந்து விதைத்திருக்கிறார்). விதைத்த பிறகு, மீண்டும் ஒரு உழவு செய்ய வேண்டும். பிறகு, ஒவ்வொரு சால் பாரிலும் 100 கிராம் தட்டை பயறு விதைகளை இரண்டு அடிக்கு ஒன்று வீதம் ஊன்ற வேண்டும். இந்தத் தட்டைப் பயறுக்காக தனியாக எந்த பராமரிப்பும் தேவையில்லை. 80-ம் நாட்களுக்கு மேல் காய்க்கத் தொடங்கி 150 நாட்கள் வரை மகசூல் கிடைக்கும். தோராயாமாக அரை ஏக்கரில் 100 கிலோ வரை தட்டைப் பயறு மகசூல் கிடைக்கும். குதிரைவாலி 5-ம் நாளில் முளைவிடும். 20 முதல் 25-ம் நாளில் களையெடுத்து விட்ட, நெருக்கமாக இருக்கும். ஒரு களை மட்டும் எடுத்தாலே போதும்.

ஒரு நாளைக்கு இரண்டு முதல் நான்கு அங்குலம் வளர்ச்சி இருப்பதால், விரைவாக பயிர் வளர்ந்து நிழல் கட்டிக் கொள்ளும். அதன் பிறகு களை எடுக்கத் தேவையில்லை. ஒரு மழை பெய்த பின், 45 நாட்கள் வரை மழை இல்லாவிட்டலும், தாக்குப் படிக்கும். பூச்சி, நோய்கள் தாக்குவது இல்லை. குதிரைவாலி 75-ம் நாளில் இருந்து கதிர் எடுக்கத் தொடங்கி, 90-ம் நாளில் முற்றிவிடும். சரியான மழை கிடைக்கா விட்டால், முற்றுவதற்கு 100 நாட்கள் வரை கூட ஆகலாம். அறுவடையின் போது குதிலைவாலியின் தாள்களை (தட்டை) நிலத்திலேயே விட்டுவிட்டு கதிரை மட்டும் அறுவடை செய்து. காய வைக்க வேண்டும். பிறகு கம்பு மூலம் அடித்தோ அல்லது மாட்டைவிட்டு மிதிக்க வைத்தோ கதிரில் இருந்து மணிகளைப் பிரிக்க வேண்டும். இப்படிச் செய்யும் போது, தூசும் சேர்ந்தே வரும். புடைத்து சுத்தம் செய்தால்... 300 முதல் 400 கிலோ வரை மணிகள் கிடைக்கும்.

குதிரைவாலித் தாள் மற்றும் தட்டைப்பயறுச் செடிகள் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாக அமையும். அதனால், அறுவடையின் போது, கவனமாக கதிர்களையும், தட்டைப் பயறையும் சொல்லி முடித்த அன்பழகன், அவருக்கு குதிரைவாலி 300 கிலோ சிடைத்தது. அதனுடைய தாள் 1 டன் கிடைக்கும் என எதிர்பார்கிறார். குதிரைவாலியை உணவுத் தேவைக்கென்று விலை வைத்துக் கொடுத்தால்... கிலோ 35 ரூபாய் வீதம் எடுத்துக்கொள்வார்கள். விதைக்கென்று கொடுத்தால் கிலோ 50 ரூபாய் வரைக்கும் போகும். அவரிடமிருந்து ரோஸ் தொண்டு நிறுவனத்தினரே கிலோ 50 ரூபாய்னு விதைக்காக வாங்குகிறார்கள். மொத்தத்தில் சாகுபடி செலவு போக 12 ஆயிரம் ரூபாய் கையில் இருக்கும். அரை ஏக்கரில், அதுவும் மானாவரியில இந்த இலாபமே பெரிய இலாபம் என்றார் சந்தோஷம் பொங்க.